சிறந்த சாதனை புரிந்த

அன்னையருக்கு சிறப்பு பரிசுகள்

செங்கை ஆட்சியர் வழங்கினார்

■ செங்கல்பட்டு

செங்கல்பட்டு ஆட்சியர் அலுவலகவளாகத்திலஉள்ளகூட்டரங்கில், மாற்றுத் திறனாளிகள் நலத் துறை சார்பில் சர்வதேச அன்னையர் தினத்தை முன்னிட்டு சிறந்த சாதனை புரிந்த அன்னையருக்கு பாராட்டு சான்றிதழ் மற்றும் நினைவு பரிசு வழங்கும் நிகழ்ச்சி நேற்று நடைபெற்றது.

இதில், ஆட்சியர் ச.அருண்ராஜ் பங்கேற்று பரிசுகளை வழங்கினார். இதேபோல், குறைதீர் கூட்டத்தில் மனு அளித்த 6 மாற்றுத் திறனாளி பயனாளிகளுக்கு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரிய குடியிருப்பு, கீரப்பாக்கம் திட்டப் பகுதியில் வீடுகள் ஒதுக்கப்பட்டு அதற்கான ஒதுக்கீட்டு ஆணை, நீட் பயிற்சி வழங்கிய 40 அரசு பள்ளி ஆசிரியர்களுக்கு பாராட்டு சான்றிதழ்களை ஆட்சியர் வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில், மாற்றுத் திறனாளிகள் நல அலுவலர் கதிர்வேல், கூடுதல் ஆட்சியர் (வளர்ச்சி) வெ.சநாராயண சர்மா, முதன்மை கல்வி அலுவலர் கற்பகம், ஆசிரியர்கள், அரசு ஊழியர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

● செங்கல்பட்டு ஆட்சியர் அலுவலக வளாகத்தில் உள்ள கூட்டரங்கில் நடைபெற்ற குறைதீர்க்கும் கூட்டத்தில், சிறந்த சாதனை புரிந்த அன்னையருக்கு பாராட்டு சான்றுகளை, ஆட்சியர் ச.அருண்ராஜ் வழங்கினார்.

● பூண்டி ஏரி நீர் மற்றும் நீர்ப்பிடிப்பு பகுதிகளில் அவ்வப்போது பெய்த மழையால் முழு கொள்ளளவை எட்டும் நிலையில் உள்ள புழல் ஏரி, கடல் போல் காட்சியளிக்கிறது.

முழு கொள்ளளவை எட்டும் புழல் ஏரி

பூண்டி ஏரியிலிருந்து நீர் திறப்பு நிறுத்தம்

■ திருவள்ளூர்

பூண்டி ஏரி நீரால், முழு கொள்ளளவை எட்டும் நிலையில் புழல் ஏரி உள்ளது. இதைத் தொடர்ந்து பூண்டி ஏரியிலிருந்து புழல் ஏரிக்கு நீர் திறப்பு நிறுத்தப்பட்டுள்ளது.

சென்னைக்கு குடிநீர் தரும் முக்கிய ஏரிகளில் ஒன்று பூண்டி ஏரி. இந்த ஏரியில், மழைக்காலங்களில் நீர்ப்பிடிப்பு பகுதிகளில் இருந்து வரும் மழைநீரும், சென்னை குடிநீருக்காக தெலுங்கு-கங்கை திட்டத்தின் கீழ், ஆந்திர மாநிலம் - கண்டலேறு அணையிலிருந்து திறந்து விடப்படும் கிருஷ்ணா நதி நீரும் சேமித்து வைக்கப்படுவது வழக்கம்.

சென்னையின் குடிநீர் தேவைக்கேற்ப, புழல், செம்பரம்பாக்கம் ஆகிய ஏரிகளுக்கு இணைப்புக் கால்வாய் மூலம் இந்த நீரை திறந்து விடுவது வழக்கம். அந்த வகையில், கடந்த மார்ச் 29-ம் தேதி முதல், பூண்டி ஏரியிலிருந்து புழல் ஏரிக்கு இணைப்பு கால்வாய் மூலம் விநாடிக்கு 350 கன அடி வீதம் நீர் திறக்கப்பட்டு வந்தது.

இதனாலும், அவ்வப்போது நீர்ப்பிடிப்பு பகுதிகளில் பெய்த மழையாலும் புழல் ஏரியின் நீர் இருப்பு தொடர்ந்து அதிகரித்து வந்தது. இதனால், 3,300 மில்லியன் கன அடி கொள்ளளவு மற்றும் 21.20 அடி உயரம் கொண்ட புழல் ஏரியில், கடந்த 21-ம் தேதி காலை 3,060 மில்லியன் கன அடி நீர் இருப்பும், 20.24 அடி நீர் மட்டமும் இருந்தது.

இந்த அளவு, முழு கொள்ளளவை எட்டும் நிலையில் இருந்ததால், கடந்த 21-ம் தேதி மாலை, பூண்டி ஏரியிலிருந்து, புழல் ஏரிக்கு நீர் திறப்பை நீர் வள ஆதாரத் துறையினர் நிறுத்தினர். இதனால், நேற்று காலை நிலவரப்படி, புழல் ஏரியில் 3,044 மில்லியன் கன அடி நீர் இருப்பும், 20.16 அடி நீர் மட்டமும் உள்ளது. விநாடிக்கு 184 கன அடி நீர் சென்னை குடிநீர் தேவைக்கு அனுப்பப்பட்டு வருகிறது.

மேலும், புழல் ஏரியில் படிப்படியாக நீர் இருப்பு குறையும்போது, சென்னையின் குடிநீர் தேவையை பொறுத்து, பூண்டி ஏரியிலிருந்து புழல் ஏரிக்கு நீர் திறக்கப்படும் என நீர்வள ஆதாரத் துறையினர் தெரிவித்துள்ளனர்.

அரிய வகை கண் நோயால் பாதித்தவருக்கு

உரிய சிகிச்சை மூலம் பார்வை அளித்து ராஜன் மருத்துவமனை சாதனை

■ சென்னை

அரிய வகை கண் நோயால் பார்வையை இழந்தவருக்கு உரிய சிகிச்சை அளித்து பார்வையை மீட்டுக் கொடுத்து சாதனை படைத்துள்ளது ராஜன் கண் பராரமரிப்பு நிறுவனம்.

திருவள்ளூரைச் சேர்ந்த அரசு ஊழியர் ஜோசப், கடந்த 6 ஆண்டுகளாக கடுமையான பார்வை இழப்புடன் போராடி வந்தார். பல தனியார் கண் மருத்துவமனைகளில் சிகிச்சை பெற்ற போதிலும் எந்த முன்னேற்றமும் ஏற்படவில்லை. இரு கண்களிலும் விகேஎச் நோய்க்குறி இருப்பது கண்டறியப்பட்டது. இதனால் அவர் படிப்படியாக பார்வையை இழந்து ஒருகட்டத்தில் முற்றிலுமாக பார்வை பறிபோனது. இதனால் அவரது அன்றாட வாழ்க்கை கடுமையாக பாதிக்கப்பட்டது.

இதன்தொடர்ச்சியாக ராஜன் கண் பராமரிப்பு மருத்துவமனைக்கு ஜோசப் வந்தார். அவரது இரு கண்களிலும் கடுமையான வீக்கம், சிக்கலான கண் புரை, பின்புற மற்றும் முன்புற சினீசியா, மாகுலர் எடிமா, இரு கண்களிலும் விட்ரிடிஸ் ஆகிய பாதிப்புகள் இருந்தன. விகேஎச் நோய்க்குறி என்பது ஒரு அரிய தன்னுடல் எதிர்ப்பு நோயாகும். ராஜன் கண் பராமரிப்பு நிறுவனத்தின் தலைவரும் மேலாண்மை இயக்குநருமான டாக்டர் மோகன்ராஜன், மருத்துவக் குழுவினர் சிகிச்சையை தொடங்கினர். இரண்டு கண்களிலும் ஒரு மாரத்தான் அறுவை சிகிச்சையை (ஒவ்வொரு கண்ணுக்கும் ஒன்றரை மணி நேரம் நீடிக்கும்) ஒரு மாத இடைவெளியில் மேற்கொண்டனர்.

ராஜன் கண் பராமரிப்பு நிறுவனத்தில் வழங்கப்பட்ட மேம்பட்ட சிகிச்சையால் ஜோசப் குறிப்பிடத்தக்க அளவில் குணமடைந்தார். தற்போது இரு கண்களிலும் கிட்டத்தட்ட 70% பார்வை திரும்பக் கிடைத்தது. இதனால் தனது வாழ்க்கையை மாற்றியமைத்த டாக்டர் மோகன் ராஜன், முழு மருத்துவ ஊழியர்களுக்கு ஜோசப் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்தார். அவருக்கு முழு அறுவை சிகிச்சையும் மானிய விலையில் செய்யப்பட்டது குறிப்பிடத்தக்கது.

அனைவருக்கும் தரமான கண் பராமரிப்பை வழங்குவதற்கான ராஜன் கண் பராமரிப்பு நிறுவனத்தின் நிபுணத்துவம் மற்றும் அர்ப்பணிப்புக்கு இது மற்றொரு எடுத்துக்காட்டு என அந்நிறுவனம் தெரிவித்துள்ளது.

➤ மீண்டும் பார்வை கிடைத்த அரசு ஊழியர் ஜோசப். உடன் ராஜன் கண் மருத்துவமனை மருத்துவர்கள்.

புழல் சிறையில் விசாரணை கைதி தற்கொலை முயற்சி

■ செங்குன்றம்

சென்னை, புழல் மத்திய சிறையில் விசாரணை கைதி ஒருவர், பிளேடால் கழுத்து, வயிற்றில் கிழித்துக் கொண்டும், பிளேடை விழுங்கியும் தற்கொலை முயற்சியில் ஈடுபட்டுள்ளார்.

சென்னை புழல் மத்திய சிறையில் விசாரணை, தண்டனை, மகளிர் பிரிவுகளில் சுமார் 4 ஆயிரத்துக்கும் மேற்பட்ட கைதிகள் அடைக்கப்பட்டுள்ளனர். இதில், ஒருவர் சென்னை- மாத்தூரை சேர்ந்த செபாஸ்டின் டேனியல் (23). இவர், குட்கா வழக்கு தொடர்பாக சமீபத்தில் எழும்பூர் போலீஸாரால் கைது செய்யப்பட்டு, விசாரணை பிரிவில் அடைக்கப்பட்டார்.

இந்நிலையில் செபாஸ்டின் டேனியல் நேற்று முன் தினம் சிறை வளாகத்தில் மறைத்து வைத்திருந்த பிளேடால் தமது கழுத்து, வயிற்றுப் பகுதிகளில் கிழித்துக் கொண்டும், பிளேடை விழுங்கியும் தற்கொலைக்கு முயற்சி செய்துள்ளார்.

இதுகுறித்து, சக கைதிகள் அளித்த தகவலின் பேரில், சம்பவ இடம் விரைந்த சிறை காவலர்கள் செபாஸ்டின் டேனியலை மீட்டு சிறை மருத்துவமனையில் அனுமதித்தனர். அங்கு முதலுதவி சிகிச்சை பெற்ற செபாஸ்டின் டேனியல் மேல் சிகிச்சைக்காக சென்னை ஸ்டான்லி அரசு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு தீவிர சிகிச்சை பெற்று வருகிறார். இதுகுறித்து, புழல் போலீஸார் வழக்கு பதிவு செய்து விசாரித்து வருகின்றனர்.

செபாஸ்டின் டேனியல், இளம் பெண் ஒருவரை காதலித்து வந்ததால், அப்பெண்ணின் தந்தை, செபாஸ்டின் டேனியல் வீட்டுக்குச் சென்று, அவரது பெற்றோரிடம் தகராறில் ஈடுபட்டுள்ளார். இதுகுறித்து, செபாஸ்டின் டேனியலின் தாய், சிறையில் உள்ள மகனை சந்திக்க வரும்போது தெரிவித்துள்ளார். இதனால் மன உளைச்சலுக்கு உள்ளான செபாஸ்டின் டேனியல் தற்கொலை முயற்சியில் ஈடுபட்டது தெரிய வந்துள்ளதாக போலீஸார் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பழுதடைந்த சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் நிலையத்தை சீரமைக்க கோரிக்கை

■ கல்பாக்கம்

கல்பாக்கம் சுற்றுப்புற கிராமங்களில் அணுசக்தி துறை சார்பில் அமைத்து தரப்பட்ட சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் நிலையத்தை சீரமைத்து தர வேண்டும் என கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

செங்கல்பட்டு மாவட்டம், கல்பாக்கத்தில் இந்திரா காந்தி அணு ஆராய்ச்சி மற்றும் சென்னை அணுமின் நிலையம் உட்பட பல்வேறு பிரிவுகளின் கீழ் அணுமின் நிலையங்கள் மற்றும் ஆராய்ச்சி மையங்கள் இயங்கி வருகின்றன.

இதில், இந்திரா காந்தி அணு ஆராய்ச்சி மையம் சார்பில் சுற்றுப்புற கிராமங்களின் மேம்பாட்டுக்காக பல்வேறு நிதியுதவிகளை செய்து அடிப்படை வசதிகளை மேம்படுத்தி வருகிறது. இதன் ஒருபகுதியாக, ரூ.17 லட்சம் மதிப்பில் மணமை, கடம்பாடி, குன்னத்தூர் உள்ளிட்ட ஊராட்சிகளில் ஆயிரம் லிட்டர் கொள்ளளவு கொண்ட, சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் நிலையம் கடந்த ஆண்டு அமைக்கப்பட்டது.

மேலும், குடிநீர் நிலையத்தை பொதுமக்கள் பயன்பாட்டுக்கு ஆராய்ச்சி மைய பொறுப்பாளர்கள் ஒப்படைத்தனர். சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் நிலையம் மக்கள் பயன்பாட்டுக்கு ஒப்படைத்த சில மாதங்களில் பழுதாகி மக்கள் பயன்படுத்த முடியாமல் உள்ளது.

மேலும், நவீனமயமாக உள்ள சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் இயந்திரத்தை பராமரிக்கும் பொறுப்பு கல்பாக்கம் நிர்வாகத்துக்கு மட்டுமே உள்ளது.

கோடை காலம் என்பதால் ஆங்காங்கே தண்ணீர் பற்றாக்குறை இருந்து வரும் நிலையில், சிஎஸ்ஆர் நிதியின் கீழ் வழங்கிய சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் நிலையம், பழுதாகி இருப்பதாகவும். அதனால், அப்பகுதி பொதுமக்கள் குடிநீர் கிடைக்காமல் அவதிக்குள்ளாகி வருவதாகவும் கூறப்படுகிறது.

இதுகுறித்து, அணுமின் நிலைய நிர்வாகத்திடம் ஊராட்சி மக்கள், மக்கள் பிரதிநிதிகள் பல முறை கோரிக்கை வைத்தும் இதுவரை எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை என கூறப்படுகிறது. அதனால், உடனடியாக இந்திரா காந்தி அணு ஆராய்ச்சி மைய நிர்வாகம் இப்பிரச்சினையில் தலையிட்டு பழுதை சீரமைக்க வேண்டும் என சமூக ஆர்வலர்கள் கோரியுள்ளனர்.

காஞ்சிபுரம் உள்ளூர் திட்டக்குழுமம்
மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம்
எண். 331/95, கோட்ராம்பாளையம் தெரு, (Old Employment Office)
இரங்கசாமி குளம் அருகில், காஞ்சிபுரம் - 631501

பொது அறிவிப்பு

1. மாவட்டம் மற்றும் வட்டம்: காஞ்சிபுரம்
2. உள்ளூர் திட்டக்குழுமத்தின் பெயர்: காஞ்சிபுரம் உள்ளூர் திட்டக்குழுமம்
3. உள்ளாட்சியின் பெயர்: வட்டார வளர்ச்சி அலுவலர் (கி.ஊ), காஞ்சிபுரம்
4. நில உபயோக மாற்றம் கோரும் கிராமம்: கீழ்கதிர்பூர் கிராமம் (Hamlet Village of Thiruparuthikundram)
5. நில அளவை எண்: 153/1C2A
6. இடத்தின் பரப்பு 2.97.19 ஹெக்டேர்
7. மனுதாரரின் முகவரி: G. Krishnamoorthy No. 4/311, Varadhan Street, Agaramel, Nazarethpettai, Poonamallee, Tiruvallur - 600123
8. முழுமை திட்ட நில உபயோகம்: அரசாணை (நிலை) எண். 139, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை (புடி 4-2), நாள் 10.05.2002ன் படி ஒப்புதல் மாற்றியமைக்கப்பட்ட (Modified Master Plan) காஞ்சிபுரம் முழுமை திட்டத்தின்படி மனுதாரர் இடத்தின் உபயோகம் விவசாய உபயோகப் பகுதியில் அமைகிறது
9. மனுதாரர் கோரிக்கை: விவசாய உபயோகப் பகுதியில் இருந்து (Agriculture use Zone) குடியிருப்பு உபயோகப்பகுதியாக (Residential use Zone) நிலப்பயன் மாற்றம் கோரியுள்ளார்.

மேற்கண்ட அறிவிப்பின் பேரில் பொதுமக்கள் ஆட்சேபனை அல்லது ஆலோசனைகள் ஏதும் அளிப்பதாக இருந்தால் இந்த விளம்பரம் செய்யப்பட்ட நாளில் இருந்து 30 நாட்களுக்குள் எழுத்துப்பூர்வமாக துணை இயக்குநர் / உறுப்பினர் செயலர் (பொ), காஞ்சிபுரம் உள்ளூர் திட்டக்குழுமம், எண். 331/95, கோட்ராம்பாளையம் தெரு, இரங்கசாமி குளம் அருகில், (Old Employment Office) காஞ்சிபுரம் என்ற முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

துணை இயக்குநர் / உறுப்பினர் செயலர் (பொ), மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம், காஞ்சிபுரம் மாவட்டம்

U GRO CAPITAL
யு குரோ கேபிடல் லிமிடெட்
4வது தளம், டவர் 3, எக்வினாக்ஸ் பிசினஸ் பார்க், LBS ரோடு, குர்லா, மும்பை - 400070

கோரிக்கை அறிவிப்பு

2002ம் ஆண்டு, கடனீட்டுச் சொத்துக்களை ரொக்கமாக்குதல், நிதி சொத்துக்களை சீரமைத்தல் மற்றும் கடனீட்டுச் சொத்துக்கள் மீதான உரிமை அமலாக்க சட்டம் மற்றும் அதற்கு தொடர்புடைய 2002ம் ஆண்டு பாதுகாப்பு வட்டி (அமலாக்கம்) சட்டத்திற்கு உட்பட்டு வெளியிடப்படும் அறிவிப்பு.
யு குரோ கேபிடல் லிமிடெட்-யின் அதிகாரபூர்வ அலுவலராக கீழே கையொப்பமிட்டுள்ளவர். 2002-ம் ஆண்டு கடனீட்டுச் சொத்துக்களை ரொக்கமாக்குதல், நிதி சொத்துக்களை சீரமைத்தல் மற்றும் கடனீட்டுச் சொத்துக்கள் மீதான உரிமை அமலாக்கச் சட்டம் பிரிவு 13(2)ன் கீழும் மற்றும் அதற்குத் தொடர்புடைய 2002-ம் ஆண்டு பாதுகாப்பு வட்டி (அமலாக்கம்) விதி 3-ன் கீழும் தமக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தைப் பயன்படுத்தி கடன்தாரர்(கள்), இணை-கடன்தாரர்(கள்)-களுக்கு கோரிக்கை அறிவிப்புகளை அனுப்பி அந்த அறிவிப்பு கிடைத்த 60 நாட்களுக்குள் கீழ்காணும் பாக்கித் தொகையை செலுத்துமாறு கோரியிருந்தார், கீழே கையொப்பமிட்டுள்ளவர் கடன்தாரர்(கள்) கோரிக்கை அறிவிப்பை புறக்கணிப்பதாக எண்ணுவதால் இந்த கோரிக்கை அறிவிப்பினை விதிகளின்படி வெளியிடுகிறார்.

வ. எண்.	கடன்தாரர்கள் பெயர்	கோரிக்கை அறிவிப்பு தேதி & தொகை
4	1. திருப்பூர் காட்டன் உலகம், 2. விடார் எலக்ட்ரிக்கல் அண்டு பிளம்பிங் ஓர்க்ஸ், 3. லட்கமி .B, 4. பாஸ்கர் .S LAN-UGCHESS0000024262	கோரிக்கை அறிவிப்பு தேதி: 09/05/2025 அறிவிக்கப்பட்ட நிலுவை தொகை: ரூ.75,78,723.00, 13/05/2025 தேதியில்

சொத்தின் விவரம்: தெற்கு சென்னை பதிவு மாவட்டம், மற்றும் கூடுவாஞ்சேரி சார்பதிவு மாவட்டத்திற்குட்பட்ட காஞ்சிபுரம் மாவட்டம், திருப்பெரும்புதூர் தாலுக்கா, ஆதனூர் கிராமம், எண் 193, பட்டாவின்படி புதிய சர்வே எண் 214/20 M.G. நகர் பகுதி (அங்கீகரிக்கப்பட்ட லே-அவுட் L.P.D.T.C.P. எண் 588/89) பகுதியில் அமைந்துள்ள புதிய பட்டா எண் 7454, பட்டா எண் 1963யின் படி சர்வே எண்கள் 214/6B, 214/6C, மற்றும் 214/7ம் பிளாட் எண் 32ல் அமைந்துள்ள 1750 சதுரடி நிலம் மற்றும் அதனை சார்ந்த RCC கூரையுடன் கூடிய 437 சதுரடி பரப்பளவு கொண்ட கட்டிடம். எல்லைகள்: வடக்கே, 23 அடி சாலை, தெற்கே பிளாட் எண் 27, கிழக்கே பிளாட் எண் 31, மேற்கே 30 அடி சாலை.

இதன் மூலம் கடன்தாரர்(கள்) கோரிக்கை அறிவிப்பிற்கு கட்டுப்பட்டு மேற்குறிப்பிட்டுள்ள நிலுவைத் தொகையை இந்த அறிவிப்பு வெளியான தேதியிலிருந்து 60 நாட்களுக்குள் கட்டணம் செலுத்தப்படும் தேதி வரையிலான வட்டி, தாமத கட்டணம், திருப்புதல் கட்டணம் மற்றும் இதர கட்டணங்களுடன் செலுத்த வேண்டும். யு குரோ கேபிடல் லிமிடெட் ஒரு பாதுகாப்பு நிதி நிறுவனம் மற்றும் கடன்தாரர்(கள்) தங்களுடைய அசையா சொத்துக்களை பிணையாக வைத்து யு குரோ கேபிடல் லிமிடெட் நிறுவனத்திடமிருந்து கடன் பெற்றுள்ளார்கள் என்பதை அறிய வேண்டும்.மேற்குறிப்பிட்டுள்ள கெடுவுக்குள் கடன்தாரர்(கள்) நிறுவனத் தொகையை செலுத்த தவறும் பட்சத்தில் மேற்கூறிய சட்டத்தின் பிரிவு 13(4)ன் படி மேற்கூறிய சொத்துக்களை கவனீமை செய்யவோ மற்றும் பிற நீர்வழகளின்படி வழுலிக்க, அதிகாரத்தை செயல்படுத்தும். யு குரோ கேபிடல் லிமிடெட் நிறுவனம் சொத்துக்களை விற்கவோ/மாற்றுவதற்கு முன்பு கையகப்படுத்தவும் அதிகாரம் உள்ளது. சொத்துக்களை விற்றபின், பாக்கி நிலவைத் தொகை இருப்பின், கடன்தாரர்களிடமிருந்து வசூலிக்க தனி சட்ட நடவடிக்கை மேற்கொள்ள யு குரோ கேபிடல் லிமிடெட் நிறுவனத்திற்கு பிற சட்டத்திற்குப்பாற்பட்டது ஆகும். மேலும், சட்டத்தின் 13(8)ன் கீழ் கடன்தாரர்கள் மேற்கூறிய காலவரை பிணைய சொத்துக்களை மீட்டுக் கொள்ள கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். மேலும், சட்டத்தின் பிரிவு 13(13)ன் கீழ் கடன்தாரர்கள் பிணைய சொத்துக்களை யு குரோ கேபிடல் லிமிடெட்நிறுவனத்தின் ஒப்புதல் பெறாமல் விற்கவோ / மாற்றவோ முடியாது என்பதை அறிய வேண்டும். இதை மீறும் பட்சத்தில் பிரிவு 29ன் கீழ் தண்டனைக்குரிய குற்றமாகும். இந்த அறிவிப்பின் நகல் கீழே குறிப்பிடப்பட்டுள்ள அதிகாரியிடம் உள்ளது. கடன்தாரர்கள் விரும்பினால் அவரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

இடம்: தமிழ்நாடு
தேதி: 24.05.2025
ஒப்பம்.- (அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி)
1/1 யு குரோ கேபிடல் லிமிடெட்

வரி விளம்பரங்கள்

சுய செய்தி

பெயர்மாற்றம்

I Primithaa M Ramesh W/O, Ramesh M R/o 17b Kathirvelan St, Madurai Meenakshi Nagar, Valsaravakkam Chennai 600087 have changed my name to Primithaa Ramesh.

I Kulluru Prabhakarudu Kalahasti S/O, Prabhakarudu Kalahasti R/o No:5,bestha Street Arani,thiruvallur District, ponneri Taluk,pincode-601101 have changed my name to Kalahastii Prabhakarudu.

வீடு / நிலம்

இடம் விற்பனைக்கு

Kanchipuram, Sengazhuneerodai st, North Facing (3030 sqft) 9884851146

OMKARA ஓம்காரா சொத்துக்கள் மறுகட்டமைப்பு பிரைவேட் லிமிடெட்
கார்ப்பரேட் அலுவலகம் : கோதுநூர் எஸ்டேட், 47வது தளம், N.C. கேல்கர் மார்க், R.G. காட்கரி சௌக், தாதர் (மேற்கு), மும்பை 400028. Tel: 022-69231111, CIN: U67100TZ2014PTC020363

பிழை திருத்தம்

இந்த செய்தித்தாளில் 22.05.2025 அன்று வெளியான கடன்தாரர் M/s Marg Limited -ன் அசையா சொத்துக்கள் விற்பனைப் பற்றிய மின்-ஏலம் அறிவிப்பு தொடர்பாக பொது அறிவிப்பு. மற்றும் பத்தி எண். 1 லைன் எண்.22-ல் "ரூ.1,35,53,91,223/- நிலுவை தொகை வசூலிக்க "எந்த உதவியும் இல்லாமல் என்ற அடிப்படையில் **12.06.2025, காலை 11.00 மணிக்கு** என்பதற்கு பதிலாக "ரூ.1,35,53,91,223/- நிலுவை தொகை வசூலிக்க "எந்த உதவியும் இல்லாமல் என்ற அடிப்படையில் **12.06.2025, மாலை 1.00 மணியிலிருந்து மாலை 3.00 மணிவரை**" என்று திருத்தி வாசிக்கவும்.

Sd/-
பியூஸ் தெவின்,
அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி, ஓம்காரா சொத்துக்கள் மறுசீரமைப்பு பிரைவேட் லிமிடெட்
(Omkara PS 01/2024-25 அறக்கட்டளையின் அறங்காவலராக செயல்படுகிறது)

நாள் : 24.05.2025
இடம் : மும்பை

தமிழ்நாடு அரசு
ஆய்க்குடிதேர்வு நிலை பேரூராட்சி – தென்காசி மாவட்டம்
ந.க.எண். 77/2025/அ1 ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு நாள்: 23.05.2025

தென்காசி மாவட்டம், ஆய்க்குடி தேர்வு நிலை **கலைஞர் நகர்புற மேம்பாட்டுத் திட்டம் 2025–26 ன்** கீழ் ரூ.79.12 லட்சம் மதிப்பீட்டில் ஆய்க்குடி பேரூராட்சி 12 வது வார்டு ராம்நகரில் பேவர்பிளாக் சாலை மற்றும் வடிகால் பணிகளை மேற்கொள்ள ஒப்பந்தப்புள்ளிகள் வரவேற்கப்படுகின்றன.

1. ஒப்பந்தப்புள்ளி நமூனாவினை https://tntenders.gov.in என்ற இணையதள முகவரியிலிருந்து இலவசமாக பதிவிறக்கம் செய்து கொள்ளலாம். மேலும் ஒப்பந்தப்புள்ளிகள் குறித்த முழு விபரங்களும் பெறலாம்.
2. ஒப்பந்தப்புள்ளிகள் தொடர்பான நேரம் மற்றும் நாள்:
   அ) ஒப்பந்தப்புள்ளி விபர முன் கூட்டம் – 03.06.2025 முற்பகல் 11.00 மணிக்கு
   ஆ) ஒப்பந்தப்புள்ளி சமர்ப்பித்தல் – 09.06.2025 மாலை 3.00 மணி வரை
   இ) ஒப்பந்தப்புள்ளி திறத்தல் – 09.06.2025 மாலை 3.30 மணி
3. ஒப்பந்தப்புள்ளி பெறப்படும் நாளன்று அலுவலகத்திற்கு விடுமுறை தினமாக அறிவிக்கப்படின் அதற்கு அடுத்த வேலை நாளில் அதே நேரத்தில் அதே இடத்தில் ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டு திறக்கப்படும்.
4. ஒப்பந்தப்புள்ளியின் ஒப்பந்தம் அறிவிப்பு, காலநீட்டிப்பு குறித்த அறிவிப்பு மற்றும் ஒப்பந்தப்புள்ளி இரத்து செய்யப்பட்டது உள்ளிட்ட விபரங்களை மேற்படி இணையதள முகவரியான https://tntenders.gov.in ல் அறிந்து கொள்ளலாம்.

செயல் அலுவலர்
தேர்வு நிலை பேரூராட்சி,
ஆய்க்குடி – 627852. தென்காசி மாவட்டம்

செ.ம.தொ.இ/ 2539 /ஒப்பந்தப்புள்ளி/2025

YES BANK **யெஸ் பேங்க் லிமிடெட்**
பதிவு மற்றும் கார்ப்பரேட் அலுவலகம்: யெஸ் பேங்க் ஹவுஸ், வெஸ்டர்ன் எக்ஸ்பிரஸ் நெடுஞ்சாலைக்கு அருகில், சாந்தா குரூஸ் கிழக்கு, மும்பை 400055
CIN: L65190MH2003PLC143249, E-mail : communications@yesbank.in, Website : www.yesbank.in

சுவாதீனம் எடுத்த அறிவிப்பு (அசையா சொத்து)

கீழே கையொப்பமிட்டுள்ள யெஸ் பேங்க் லிமிடெட்டின் ("வங்கி") அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி அவர்கள், 2002ம் ஆண்டு கடனீட்டுச் சொத்துக்களை ரொக்கமாக்குதல் மற்றும் நிதி சொத்துக்களை சீரமைத்தல் மற்றும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கச் சட்டத்தின் கீழும் ("சட்டம்"), மேற்சொன்ன சட்டத்தின் 13(2)வது பிரிவின் கீழ் வழங்கப்பட்ட அதிகாரத்தின் கீழும், 2002ம் ஆண்டு கடனீட்டுக் சொத்துக்கள் மீதான உரிமை (அமலாக்க) விதிகள், 9வது விதிமுறைக்கு ஏற்ப **திரு. டி. டி. சுந்தர் & திரு. டி. டி. சுந்தர், அலுவலகம் திரு. டி. டி. சுந்தர் இபிளம் பிரபிஸ்டி இந்தியா பிரைவேட் லிமிடெட் மற்றும் திருமதி. பொன்மொழி, கணக்கு எண்.** HLN000500701306 ஆகியோருக்கு அனுப்பிய 25 **ஜனவரி** 2025 தேதியிட்ட டிமாண்ட் நோட்டீசில் குறிப்பிட்டுள்ளபடி, 24 **ஜனவரி 2025 அன்று வரை செலுத்த வேண்டிய ரூ.6,28,935/–ஐ (ரூபாய் ஆறு லட்சத்து இருபத்தெட்டாயிரத்து தொள்ளாயிரத்து முப்பத்தைந்து மட்டும்)** மேற்சொன்ன நோட்டீஸ் கிடைத்த 60 நாட்களுக்குள் திரும்ப செலுத்துமாறு கேட்டுக் கொண்டிருந்தார்.

கடன்தாரர்/அடமானம் வைத்தவர் மேற்சொன்ன தொகையை திரும்பச் செலுத்த தவறியதால் கடன்தாரர்/அடமானம் வைத்தவர் மற்றும் பொதுமக்களுக்கு பொதுவாகவும் அறிவிக்கப்படுகிறது யாதெனில் கீழே கையொப்பமிட்டவர், கீழ்க்குறிப்பிட்டுள்ள சொத்தை மேற்சொன்ன சட்டப்பிரிவு 13(4) மற்றும் மேற்சொன்ன விதிகளின் 8வது விதிமுறைக்கு இணங்க, **22.05.2025** தேதியன்று சுவாதீனம் எடுத்துக் கொண்டார்.

கடன்தாரர்/அடமானம் வைத்தவருக்கு குறிப்பாகவும், பொதுமக்களுக்கு பொதுவாகவும் எச்சரிக்கப்படுவது யாதெனில், சுவாதீனம் எடுத்துக் கொண்ட இந்த சொத்து வங்கிக்கு **06.05.2025 அன்று வரை செலுத்த வேண்டிய ரூ.6,56,580/–(ரூபாய் ஆறு லட்சத்து ஐம்பத்தாறாயிரத்து ஐநூற்று எண்பது மட்டும்)** மற்றும் கட்டணங்கள், செலவுகள் மற்றும் வட்டிக்கும் பிணையமாக உள்ளது என்பதால், யாரும் மேற்படி சொத்து தொடர்பாக எந்தவித வில்லங்கமும் மற்றும் தொடர்புகளையும் வைத்துக் கொள்ளக் கூடாது என்று இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது.

SARFAESI சட்டத்தின் பிரிவு 13(8)ன் கீழ், ஈடுபெற்ற கடன் வழங்கியவருக்கு செலுத்த வேண்டிய நிலுவைத் தொகை, ஈடுபெற்ற கடன் வழங்கியவருக்கு ஏற்படும் அனைத்து செலவுகள், கட்டணங்கள் மற்றும் செலவுகள், பொது ஏலம்/டெண்டர்/தனியார் ஒப்பந்தத்திற்கான அறிவிப்பு வெளியிடப்படும் தேதிக்கு முன்னர் எந்த நேரத்திலும் ஈடுபெற்ற கடன் வழங்கியவருக்கு வழங்கப்படும்பட்சத்தில், ஈடுபெற்ற சொத்து விற்கப்படவோ அல்லது மாற்றப்படவோ மாட்டாது, மேலும் அந்த ஈடுபெற்ற சொத்தை மாற்றவோ அல்லது விற்பனை செய்யவோ எந்த நடவடிக்கையும் எடுக்கப்படாது.

ஈடுபெற்ற சொத்து குறித்த விவரம் :

காலி நிலத்தின் சிறு துண்டுகளும் அதன் பகுதிகளும். மனை எண்.191, விஸ்தீரணம் 900 சதுர அடி, "சக்தி கார்டன் வெஸ்ட்" சிம்டிஏ அங்கீகார எண். PPD/LO No.1851/2019, கடிதத் எண்.L1/20366/ 2018 தேதி 1.10.2019 மற்றும் பட்டா எண்.113ன் படி, சர்வே எண்.120/1B, கும்மனூர் கிராமம், பொன்னேரி தாலுகா, திருவள்ளூர் மாவட்டம், வட சென்னை பதிவு மாவட்டம் மற்றும் ரெட்ஹில்ஸ் சார் பதிவு மாவட்டத்தில் இந்த சொத்து உள்ளது. சொத்தின் எல்லைகள் :

வடக்கே : 24 அடி அகல சாலை, **தெற்கே :** மனை எண்.186
கிழக்கே : மனை எண்.192, **மேற்கே :** மனை எண்.190
விஸ்தீரணம் : கிழக்க